★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 12உ திங்கள் (25—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 13உ செவ்வாய் (26—6—56) [இதழ் 9

அகமதாபாத் ஆலைகள் பெற்ற இலாபம்!

அகமதாபாத், சூன், 24—

அகமதாபாத்தில் உள்ள 65 நெசவு ஆலைகளில் 46 ஆலைகள், 1955-ம் ஆண்டில் மட்டும் ரூ. 896 இலட்சம் இலாபம் சம்பாதித்துள்ளனவாம்!

இந்தத் தகவலை நெசவாலைத் தொழிலாளர் சங்கம் வெளியிடும் 'மஜ்தூர் சந்தேஷ்' என்ற இதழ் வெளியிட்டுள்ளது.

இந்த மொத்த இலாபத்தில் 'மானேஜிங் ஏஜெண்டு'களுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

'லாரி புரோக்கரு'ம் காமராசர் சர்க்காரும்!

நிலத்தின்மீது கடன் கிடையாதாம்

மைசூர், சூன் 23—

"நில அடமானத்தின்மீது எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படமாட்டாது; பயிர்கள் மீதே கடன் தரப்படும்" என்று மத்திய சர்க்கார் உணவு அமைச்சர் அஜீத் பிரசாத்ஜெயின் தெரிவித்துள்ளார்.

திருமலையானுக்கு 'யோகம்' அடிக்கிறது!

திருமலை ஜூன் 22—

கல்கத்தாவைச்சேர்ந்த சந்திர சேகர சங்கரலால் என்பவர், தன் சுற்றத்தாருடன் திருமலைக்குவந்து ஏழுமலையானுக்கு ரூ. 500-ல் திருமணவிழா நடத்தி, ரூ. 11,500-க்கு நூறு ரூபாய் நோட்டுகளாகவே, உண்டியில் போட்டாராம்!

ஆகாத ஆசை!

பம்பாய், சூன் 23—

"இந்தியின் மதிப்பை தேசீய மொழி என்ற முறையில் பாதுகாக்க வேண்டுமானால், அதை எளிமையாக்கி வளப்படுத்த வேண்டும்" என்று, பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய், கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

பீகாரில் வெள்ளம் 6 இலட்சம் பேர் தவிப்பு!

பாட்னா, சூன் 24—

பீகாரில் 14 ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்துள்ளதென்றும், இதனால் 600-க்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6 இலட்சம் மக்கள் தவித்துக்கொண்டுள்ளனரென்றும் அறிவிக்கப்படுகிறது.

டாக்டர் சுப்பராயன்—ஷேக் அப்துல்லா சந்திப்பு

ஸ்ரீநகர், சூன் 23—

காஷ்மீர் அரசியலாரின் அனுமதி பெற்று, காவலில் வைக்கப்பட்டிருக்கும் காஷ்மீரின் முன்னாள் பிரதமர் ஷேக் அப்துல்லாவை டாக்டர் பி. சுப்பராயன் சந்தித்து ஒரு மணி நேரம் உரையாடினாராம்.

15000 பேர் வெளியேறுவர்

தெலிங்கானா இணைப்பிற்குப் பின்னர், சென்னையிலுள்ள ஆந்திர அலுவலகங்கள் அணைத்தும் மாற்றப்படும்போது சுமார் 15,000 பேர் சென்னையைவிட்டு வெளியேறுவர் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

அண்ணா காட்டிய உவமை

'கொடுமை புரிந்த கொத்தலாவலையுடன் குலவுவோர்!'

'தென்னாட்டவரின் 'கர்த்தர்'களாக முடியுமா?'

திருவில்லிபுத்தூர் கூட்டத்தில் அண்ணா முழக்கம்

"காமராசர் சர்க்காரின் நிலை என்ன? லாரி 'புரோக்கர்' ஒருவருக்கு லாரியும் சொந்தமாயிருக்காது; லாரியில் ஏற்றிச் செல்லப்படும் பொருளும் சொந்தமாயிருக்காது; சாமான்களனுப்ப விரும்பும் நபரிடம் லாரி பெற்றுத் தருவதாகக் கூறுவார்; அதற்கான சத்தமும் பெற்றுக் கொண்டு, 'கமிஷன்' வாங்கிக் கொள்வார்! லாரி சொந்தக்காரரிடத்தில், சாமான்களையும் சத்தத்தையும் ஒப்படைத்துவிட்டு, அவரிடமும் 'கமிஷன்' வாங்கிக் கொள்வார்!

"இப்படி 'புரோக்கர்'போல, இந்த நாட்டு மக்களிடமிருந்து வரிப்பணத்தை வாங்கி, அதில் சிறிது 'கமிஷன்' எடுத்துக் கொண்டு, எஞ்சிய அத்தனையையும் டெல்லியிடம் தந்துவிடுகிறது, காமராசர் சர்க்கார்! அதற்காக, டில்லியிடமும் 'கமிஷன்' பெற்றுக் கொள்கிறது.

"நிலவரி, விற்பனைவரி தவிர, ஏனைய வரிகளை எல்லாம், டில்லிக்குத்தானே வசூல் செய்து தருகிறார், காமராசர்?

"வரிகள் மட்டுமல்ல டில்லியிடம்—அதிகாரங்கள் அனைத்தும் டில்லியிடம்தான்!

"உதாரணமாக, கைத்தறி நெசவாளர் பிரச்சினையை எடுத்துக் கொள்வோமே! இந்தத் திருவில்லிபுத்தூரில் கைத்தறி நெசவாளர்கள் ஏராளம் உண்டு; அவர்களுக்குத் தங்களின் கஷ்டங்கள் நன்றாகத் தெரியும்—சில நாள் - நூல் இல்லை, நெய்வதற்கு! சில நாள் - நெய்த துணி விற்பனையாவதில்லை! இப்படி, பிரச்சினைகள் அவர்களுக்கு அடிக்கடி தொல்லை தருகின்றன; இதற்குத் தீர்வு காண டெல்லி சர்க்கார்தான் அதிகாரம் படைத்திருக்கிறது.

"விஞ்ஞானம் வேறு எல்லாக் கைத்தொழில்களையும் ஒழித்துவிட்டாலும், இந்தக் கைத்தறி மட்டும் விஞ்ஞானத்தோடு போட்டியிட்டுக் கொண்டு இன்றுவரையில் ஜீவித்திருக்கிறது.

"இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இந்தத் தலைமுறையினர் வாழ வேண்டுமானால்; சில ரகத் துணிகள் கைத்தறிக்கெனப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட வேண்டும்; அவற்றை ஆலைகள் நெய்யக் கூடாது என்று கோரி, சென்னை சட்டசபை ஒரு முகமாகத் தீர்மானித்தது. அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று? அகமதாபாத் ஆலை முதலாளிகளின் நண்பர்களான டெல்லி சர்க்கார், அந்தத் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டிக்குத் தானே அனுப்பினா? நம் நாட்டில், நமக்கென ஒரு சர்க்கார் இருந்திருக்குமானால்—முழு அதிகாரம் பெற்ற ஒரு சர்க்கார் இருந்திருக்குமானால், நெசவாளர்கள், இந்தத் துயரங்களுக்கு ஆளாக வேண்டியிராதே!

"எனவே, நெசவாளர்களுக்கு, திராவிட நாடு விஷயத்தில் வேறெல்லோரையும்விட அதிகமான அக்கரை இருக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

"நமக்கென, சர்வ அதிகாரங்களும் படைத்த, முற்றுப் பெற்ற முழு அதிகாரம் படைத்த சர்க்கார் வேண்டும்—திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்ற நமது கோரிக்கை சட்ட விரோதமானது அல்ல! எந்த வகையாலும், நியாய விரோதமானதும் அல்ல!"

என்று, அண்ணா அவர்கள், திருவில்லிபுத்தூரில் 15—6—56 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் தொடர்ந்து பேசியதாவது :—

"இலங்கையில் மட்டுமல்ல, தமிழர்கள் கொடுமைப் படுத்தப்படுவது; வெளிநாடுகளில் எல்லாம்—எங்கெங்கு தமிழர்கள் வாழ்கின்றனரோ அங்கெல்லாம், 'லைசென்ஸ்' பெறாத நாய்களைப்போல, தமிழர்கள் கேட்பாரற்றுக் கொடுமைக்காளாக்கப்படுகின்றனர்.

"இந்தக் கொடுமைகளைக் குறித்துக் கவலைப்பட, இந்தத் தென்னாட்டில் தமிழர்களுக்கென ஒரு சர்க்கார் இல்லையே!

"உங்களுக்கு ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன்—நேருவின் அருமைச் சோதரியார் விஜயலட்சுமி அம்மையார் அவர்கள், முன்பொருமுறை இலங்கை சென்றிருந்தார், தம் இரு பெண் குழந்தைகளுடன்!

சென்றிருந்தவர்கள், இலங்கையில் அப்போது பிரதமராயிருந்த கொத்தலாவலையுடன் விருந்து உண்டார்கள்; அது மட்டுமல்ல; கொத்தலாவலையுடன், திருமதி விஜயலட்சுமியின் பெண்கள், ஆங்கில பாணியில் நடனமும் ஆடினார்கள்!

"இந்த நிகழ்ச்சி பற்றியோ, விஜயலட்சுமியின் பெண்கள் தங்களுக்குள்ள ஆங்கில நடனத் திறனைக் காட்டுவது பற்றியோ நமக்குக் கவலையில்லை; ஆனால், எந்த நேரத்தில் எங்கு இந்தக் கேளிக்கைகள் நடைபெற்றன?

"நாடற்றவர்கள் — இதைக் கேட்க நாதியற்றவர்கள்'—என்று, இலங்கை வாழ் தமிழரைக் கொடுமைக்கு ஆளாக்கிக் கேலி பேசி, நாட்டை விட்டுத் துரத்திக்கொண்டிருக்கிறார், கொத்தலாவலை; இது கண்டு கொதிப்படைந்திருந்தனர், தமிழர்; செய்வதறியாது திகைத்தனர்; யாழ்ப்பாணம் கடற்கரையில் மகளும், தனுஷ்கோடி கடற்கரையில் தாயுமாக நின்று கதறியழுது கொண்டிருந்தனர்; அந்த நேரத்தில்தான், இந்தியப் பிரதமரின் தங்கை, இந்தக் கொடுமைகளுக்குக் காரணமான கொத்தலாவலையுடன் கூடிக் குலவிக் கொண்டிருந்தார் என்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதல்லவா?

"இப்படி, தமிழரின் அவதி கண்டு ஈவு இரக்கம் ஏதும் கொள்ளாமல், கொடுமை புரிவோருடன் கூடிக் கொட்டமடிக்கும் வடநாட்டவர்கள், இந்த நாட்டுக்குக் 'கர்த்தர்'கள் என்று சொன்னால், அது எப்படிப் பொருந்தும்? இப்படிப் பட்டவர்களிடம் தென்னாடு ஒப்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவைப் பிரதேசவாரியாகப் பிரித்துப் பார்க்கக்கூடாதாம்

தொழில் துறையில் சென்னை மட்டும் பின்தங்கியில்லையாம்

மத்திய நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் கூற்று

சென்னை, சூன் 24—

"சீதோஷ்ண நிலைகள், வெப்பமான காலநிலை, மற்றும் சில அம்சங்கள் இவற்றினால்தான், கனரக மின்சார இயந்திரச் சாதன உற்பத்தித் தொழிற்சாலையை போபாலில் நிறுவ முடிவு செய்தோம்.

சிந்திரி, ஐதராபாத், போபால், நைனிடால், ஆவடி முதலிய இடங்களை இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்காகப் பரிசீலித்தோம். இது நிறுவுவதற்குப் போபாலின் சீதோஷ்ண நிலை தான் பொருத்தமானதாக இருக்க முடியும் என்பதையும், இதர இடங்களைத் தேர்ந்தெடுத்தால் உற்பத்திச் செலவு அதிகரிக்கும் என்பதையும் உணர்ந்ததினால்தான், போபாலில் தொழிற்சாலை நிறுவ முடிவெடுத்தோம். இது நிபுணர்களின் கருத்து. அதன்படியே தான் நடந்தோம்.

"மேலும் போபால் போன்ற இடங்களை ஒப்பிடும்போது, சென்னை மட்டுமல்ல—தொழில் துறையில் பின்தங்கிய பிரதேசம் என்பதையும் உணர வேண்டும். இறுதியாக மேற்கொள்ளப்பட்ட முடிவு சரியானதுதான்.

"எந்த ஒரு பிரதேசமும் சலுகை காட்டப்படும் பிரதேசமாக இருக்கவில்லை(!) நாடு முழுவதையும் நீங்கள் ஒரு சேரப் பார்க்க வேண்டுமே தவிர, தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறேன்," என்று, மத்திய நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் கூறியிருக்கிறார்.

தோழர்களே, நீங்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டீர்களா—இல்லையெனில், உடனே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 25-6-'56 திங்கள்

சர்வாதிகாரத்தை நிலைநாட்டத்தானே!

இன்று நடைபெற்றுவரும் நேர்முகத் தேர்தல், அதிகமான பணச் செலவிற்கும், விரும்பத் தகாத அரசியல் நிலைமைகளுக்கும் உறைவிடமாக இருக்கிறது; எனவே, அவ்விரண்டு விளைவுகளையும் கருவறுக்க மறை முகத் தேர்தலே மேற்கொள்ளுவது நியாயமாகும் என இந்தியப் பிரதமர் நேரு கருத்தறிவித்திருந்தார். அதுபற்றி ஏற்கனவே இரண்டுமுறை ஆராய்ந்துள்ளோம். அதைத் தொடர்ந்தே இதுவும் எழுதப்படுகிறது.

சனநாயகத்தை அரசியல் நடைமுறையாகக்கொண்டிருக்கிற எந்த ஒரு நாட்டிலும், எடுத்த எடுப்பிலேயே, வயது வந்தோர் வாக்குரிமை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குறிப்பிட்ட தொகைக்கு வரி செலுத்துவோர், எழுத்தறிவு உடையோர், வயது வந்தோர் என்ற முறையில்தான் படிப்படியாக வாக்குரிமை வளர்ந்து வந்திருக்கிறது. அதே ரீதியில் தான் இந்தியத் துணைக்கண்டத்திலும் வாக்குரிமை வயது வந்தோரை அடைந்து இருக்கிறது.

வரி செலுத்துகிறவர்களுக்கு மட்டுந்தான் வாக்குரிமை என ஏகாதிபத்தியம் கூறியபொழுது அதை ஒரு பிற்போக்கு ஏற்பாடு என இந்திய தேசிய காங்கிரஸ் எள்ளிநகையாடியது. அந்தப் பிற்போக்கு நிலையைக் கைவிட்டு, எழுத்தறிவு பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும், வாக்குரிமை அளிக்க ஏகாதிபத்தியம் முன்வந்தது. அம்முறையையும் பிற்போக்கானது எனக் கேலி செய்ததுடன், வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டால் தன்னுடைய எதேச்சாதிகார ஆட்சிக்கு இடமில்லாது போகுமே என ஏகாதிபத்தியம் நடுங்குகிறது எனவும், இந்திய காங்கிரஸ் இடிமுழக்கம் செய்தது.

வாக்குரிமையை விரிவாக்குவதில் ஏகாதிபத்தியம் காட்டிய நயக்கத்தை ஏளனமாகவும், வேறு கருத்திலும் பேசிவந்துவிட்டதால், தனக்கு வாய்ப்பு நேர்ந்தகாலை, வயதுவந்தோர் வாக்குரிமை தந்து வந்ததிலிருந்து பின்செல்ல முடியாமல் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையை வேண்டா வெறுப்பாகக் கொடுக்க காங்கிரஸ் முன்வந்தது. வேண்டா வெறுப்பாகத்தான் காங்கிரஸ் அதைச் செய்திருக்கிறது என்பதற்கு, ஏகாதிபத்தியம் செயலாற்றிவந்த எழுத்தறிவு பெற்ற வாக்காளர்களைக்கொண்டு மட்டுமே, அரசியல் ஆக்க மன்றத்தை அமைத்துக்கொண்ட ஒன்றே போதிய சான்றாகும்.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்காது எழுத்தறிவு பெற்றிருப்பவர்களுக்குமட்டுமே வாக்குரிமை அளிப்பது மிகவும் பிற்போக்கானது என இடிமுழக்கம் செய்துவந்த காங்கிரஸ் கட்சி, அந்தப் பிற்போக்கான குறைந்த வாக்குரிமை அடிப்படையிலேயே அரசியல் ஆக்க மன்றத்தை உருவாக்க முன்வந்தது அரசியல் விசித்திரமாகும்.

குறைந்த வாக்காளர் அடிப்படையில் அரசியல் ஆக்க மன்றத்தை அமைக்க காங்கிரஸ் முன்வந்ததுகூட ஒரு விசித்திரமல்ல. குறைந்த வாக்காளர்களைக் கொண்டு நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால், அரசியல் ஆக்க மன்றத்தை அமைக்கக் காங்கிரஸ் முன்வராதது முன்னையதிலும் விசித்திரமானதாகும்.

எழுத்தறிவு பெற்ற வாக்காளர்கள் தொகை, இங்குள்ள மொத்த மக்கள் தொகையில் இருபது சதவிகிதத்திற்கும் குறைவானதேயாகும். அரசியல் ஆக்கமன்ற உறுப்பினர்களை நேர்முகமாகத் தேர்ந்தெடுப்பதாலும், காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களை மட்டுமே, அக்குறைந்தபட்ச வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பார்களா என்பதில் அந்தக் கட்சிக்கு நிச்சயம் கிடையாது. அதுவுமன்றி, அரசியல் ஆக்க மன்றத்தில் தனது கட்சியின் எதேச்சாதிகாரத்தைத் தட்டிக் கேட்கும் வகையில் வேறு தனிப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தின் விளைவாகவும், நேர்முகத் தேர்தலைக் குறித்துச் சிந்திப்பதற்குக்கூட காங்கிரஸ் கட்சிக்குத் துணிவு ஏற்படவில்லை. எனவே, குறைந்தபட்ச வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டு அரசியல் ஆக்க மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது காங்கிரஸ்.

சட்டசபைகள் அனைத்திலும் காங்கிரஸ் கட்சிதான் ஆளும் கட்சியாக இருந்தது. எனவே, காங்கிரஸ் குறிப்பிடும் அபேட்சகர்கள் நிங்கலாக வேறு எவரும் தேர்ந்தெடுக்கப்பட முடியாது என்ற உண்மையை உறுதியாக்கிக் கொண்டுதான், சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டு அரசியல் ஆக்க மன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் ஏற்றது.

எத்தகைய அரசியல் அமைப்பை உருவாக்குவது என்ற பிரச்சினையின் கீழ், மாகாண சட்டசபை தேர்தல் நடைபெறவில்லை. சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்த காலத்தில் அரசியல் சட்டத்தை உருவாக்குவது என்ற பிரச்சினை, கருத்து உருவில்கூட உலாவவில்லை. எனவே, அந்தப்பிரச்சினை தேர்தலில் கொள்ளப்படாது போனதில் வியப்பில்லை. ஆனால் வேறு ஒரு குறிக்கோளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை பிரதிநிதிகளைக்கொண்டு, மூலக் குறிக்கோளுக்கு முற்றிலும் மாறுபட்ட அரசியல் சட்ட ஆக்கத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க முனைவது, மக்களாட்சி முறைக்கு முற்றிலும் முரணானதாகும். குறிக்கோளில் மாற்றம் இருப்பதுடன், காலஅளவிலும் சட்டசபை காலம் கடந்துவிட்ட ஒன்றுமாகும்.

மேற்குறிப்பிட்டு காட்டிய சம்பவங்களினால், காங்கிரஸ் கட்சிக்கு, உண்மையான ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பதைக் காட்டிலும், தனது கட்சி சர்வாதிகாரத்தில்தான் அதிகமான நம்பிக்கை இருக்கிறது என்பதை விளக்கமாகத் தெரிந்துகொள்ளலாம். சர்வாதிகாரத்தில் நம்பிக்கை உடைய காங்கிரஸ் தனது கட்சி சர்வாதிகாரத்தைத்தான் நீடிக்க முயலும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, நேர்முகத் தேர்தலை மாற்றி மறைமுகத் தேர்தலைத் திணிக்க இந்தியப் பிரதமர் கருத்துக்கொள்வது, தனது கட்சி சர்வாதிகாரத்தை என்றென்றைக்கும் நிலைநாட்ட மேற்கொள்ளும் அரசியல் தந்திரமே அல்லாது வேறொன்றுமல்ல என்பதை நாம் திட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

'தொழில் வளர்ச்சியில் சென்னை பின்தங்கிக் கிடக்கிறது'

முன்னரே மேற்கொண்ட பக்ரா—நங்கல் போன்ற திட்டங்களை நிறைவேற்ற நிதி வேண்டுமாம்!

கனரகத் தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் தென்னாட்டில் இல்லையாம்!

குந்தா-நெய்வேலி திட்டங்களுடன் திருப்திகொள்ள வேண்டியதுதானும்

நிதி மந்திரி தேஷ்முக்கின் சமாதானம்

"மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்றவகையில் இரண்டாவது திட்டத்தில் சென்னைக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை எனச் சென்னை அரசாங்கம் குற்றஞ் சாட்டுகிறது. இக்குற்றச்சாட்டிற்கு தேசிய அபிவிருத்திக்குழுவில் பதில் தரப்பட்டிருக்கிறது.

"கணித முறையைக் கொண்டு மட்டுமே இப்பிரச்சினையை நோக்குவதானால், ஒதுக்கப்பட வேண்டிய தொகைக்குக் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை என்றே தெரியவரும்.

"இன்னும் சில மாகாணங்களின் விவகாரமும் இதுவேயாகும். இவ்வகையில், சென்னையைவிட உத்திரபிரதேசம் மிகுதியாகக் குறை கூறுகிறது.

"நிதி ஒதுக்குவதில் மூன்று அல்லது நான்கு உண்மைகளை ஆய்ந்துக் கொள்ள வேண்டும்

"குறைந்த அபிவிருத்தி என்ற இனத்தில் சென்னை உள்ளடங்கிக் கிடக்கிறது என்பதை நான் ஒப்புகிறேன்.

"திட்டத்திற்குப் பணம் ஒதுக்குவதில் கொள்ளப்பட வேண்டிய மக்கள் எண்ணிக்கை ஒருபக்கம் இருக்க, குறிப்பிட்ட ஒரு மாகாண அரசாங்கம் எழுப்பக்கூடிய நிதி நிலையும், ஏற்கனவே கட்டுப்படுத்திக் கொண்ட தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களும், இரண்டாவது திட்டத்தில் மாகாணங்களுக்கு நிதி ஒதுக்குவதில் கருதத்தக்கவைகளாகும்"

இவைகளைக் கூறிவிட்டு மேலும் இவைகளுக்கு விளக்கம் தரும் வகையில் நிதிமந்திரி குறிப்பிட்டதாவது:—

"முதல் திட்டத்தில், ஒவ்வொரு மாகாண அரசாங்கத்திற்கும் சொந்தமாக உள்ள நிதி நிலையை முறையாகக் கொள்ளப்பட்டது. தங்களுடைய நிலைமை பற்றி தாங்களே தெளிவற்றிருந்ததால், தங்களுடைய குறைவை நிறைவு செய்ய மத்திய அரசாங்கம் எந்த அளவு உதவி செய்யக்கூடும் என்பதில் மாகாணங்களுக்கே நிச்சயமில்லாதிருந்தது. அதனால், பின்தங்கிய மாகாணங்கள், அந்த அளவிற்குப் பாதகமடைந்தன.

"கருதப்பட்ட மற்றொரு முறை என்னவென்றால், சீர்கேடற்றிருந்த நிர்வாக இயந்திரமாகும். அந்தக் குறைபாடு சென்னைக்கு இல்லை

"அவைகள், தங்களுடைய நிர்வாக அமைப்புகளைச் சீராகச் செப்பனிட்டுக் கொள்ளவில்லை எனவே, அவைகளுக்கு அதிகம் பணம் ஒதுக்குவது என்பதிலும் பொருள் இல்லை.

"ஏற்கனவே கட்டுப்படுத்திக் கொள்ளப்பட்டுத் தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய பக்ரா—நங்கல், இராகுட், சித்தரஞ்சன் போன்ற திட்டங்கள் உள்ளன. எவ்வகையிலாவது அவைகளுக்கு நிதி தேடியாக வேண்டும்

"மாகாணங்கள் நிதியும், மத்திய அரசாங்கத்தால் கொடுக்க இயலக்கூடிய நிதியும் சேர்ந்ததான் முதல் திட்டத்தின் அடிப்படையாக அமைந்தது. அதன் விளைவு, இரண்டாவது திட்டதனை உருவாக்குவதிலும் குறிப்பாக செயல்பட்டு இருக்கிறது.

"சென்னையில் செயலாற்றுவதற்கான பெரிய திட்டங்கள் எதுவும் இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நீர் மின்சார உற்பத்தியில் இறுதித் திட்டமாக உள்ளதும், தம்மால் ஓரளவு கருத்துச் செலுத்தப்பட்டதுமான குந்தா நீர்மின்சார உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டத்தை நிறைவேற்ற பணம் தேடவேண்டி இருக்கிறது. இவை இரண்டும் நீங்கலாக, மேற்கொள்ளவேண்டிய பெரிய திட்டங்கள் எதுவும் சென்னையில் கிடையாது.

"மத்திய அரசாங்கம் செலவிட முன்வந்துள்ள தொகையில் பெரும் பகுதி நாட்டின் இப்பகுதியில் செலவிடப்போவது கிடையாது என்பது சென்னையின் மற்றொரு குறையாக இருக்கிறது அதாவது, ஒரு மாகாணத்தின் திட்டம் அம்மாகாணத்தை மட்டுமே பொருத்ததோர் திட்டமாகக் கருதப்படாமல், அப்பகுதியில் மத்திய அரசாங்கம் செலவிடும் தொகையையும் சேர்த்து மாகாண திட்டமாகக்கொள்ளப்பட வேண்டும்

"கனரகத் தொழில் அபிவிருத்திக்கு, மற்றப் பகுதிகளில் இருப்பது போன்று தென்னாட்டில் மூலப்பொருள் வசதிகள் கிடையாது என, தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சி அறிவிக்கிறது."

உயிரை காக்கும் மின்சாரக் கருவி!

நீரில் மூழ்கியவர்களுக்கு செயற்கை சுவாசமளிக்கும் மின்சார உயிர் காப்பாற்றும் கருவியை, உலக பௌதிக சிகிச்சை நிறுவனத்தின் இரண்டாவது மகாநாட்டில் காட்டப்படுகிறது.

நோயாளியின் நாபி வலையில் செலுத்தப்படும் கண்ணுடிக் கோல் துணைய மின்சார அலைகளைச் செலுத்தி, சுவாசத்தை ஒழுங்கு படுத்துவதற்குத் தேவையான எந்த முறையிலும், 'உதர விதான'த்தை இயக்குகிறது. வாயு அடைப்பு, பெரும் காசநோய், மற்ற சுவாசக் கோளாறுகளிலும் இது பயன்படுமென நம்பப்படுகிறது.

தம்மம்பட்டி வழக்கு

ஜி. பி. சோமசுந்தரம் சாட்சியம்

பிப். 20-ல் தம்மம்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக வழக்கு, 22-6-56-ல், ஆத்தூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்டில் பல வாய்தாக்களுக்குப் பின் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கழகத் தோழர்கள் சார்பில், தம்மம்பட்டி 'டைலர்' தோழர் ஒருவரும், ஜி. பி சோமசுந்தரம் அவர்களும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

கழகத் தோழர்களின் சார்பில் வழக்கறிஞர் செட்டோ அவர்கள் வந்திருந்தார்.

பின்னர் மாஜிஸ்திரேட், 25-6-56-ல் வழக்கில் தீர்ப்புகூறுவதாக ஒத்திவைத்தார்.

அணுவில் ஒரு புதிய பொருள்!

வாஷிங்டன், ஜூன் 22—

அமெரிக்க விஞ்ஞானிகள் அணுவில் ஒரு புதிய பொருள் இருப்பதாகக் கண்டு பிடித்துள்ளனர் என்றும், அப்புதிய பொருளுக்கு 'கியூட்ரினே' என்று பெயரிடப்பட்டுள்ளதென்றும் தெரியவருகிறது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'கியூட்ரினே' அணு பற்றிய அறிவைப் பெரிதும் விரிவடையச் செய்யுமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனராம்.

தேசிய மயமாகும் கோலார் தங்கவயல்

முதலாளிகளுக்கு நஷ்டஈடு எவ்வளவு?

புதுடில்லி, ஜூன் 22—

தேசிய மயமாக்கப்பட விருக்கும் கோலார் தங்கவயல்களின் உரிமையாளர்கட்கு, எவ்வளவு தொகை நஷ்டஈடாகத் தரப்பட வேண்டுமென்பதை இந்தியப் பேராசிரியர் முடிவு செய்துள்ளனராம். 10-ஆண்டுக் காலத்தில் கம்பெனியின் பங்குகளின் சராசரி மதிப்பீட்டின்படி நஷ்டத் தொகை அளிக்கப்படுமாம்.

மைசூர் அரசினர் ரூ. 87 இலட்சம் நஷ்ட ஈடாகத் தர விருப்பம் தெரிவித்ததும், இதை ஏற்க மறுத்து பிரிட்டிஷ் 'கம்பெனி'யார் ரூ. 2 கோடி கேட்டதும் நினைவிலிருக்கலாம்.

அருப்புக்கோட்டையில் அண்ணா

இராமநாதபுரம் மாவட்டச் சுற்றுப்பயணத்தின் இறுதி நிகழ்ச்சி

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா அவர்கள் மேற் கொண்ட சுற்றுப் பயணம், அருப்புக்கோட்டையுடன் முடிவுற்றது.

அருப்புக்கோட்டையில் 17—6—56-ல் பெய்த பெருமழையையும் :பொருட்படுத்தாது, கழகத் தோழர்கள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இரவு 7 மணியளவில், அண்ணா அவர்கள், தோழர்கள் எம். எஸ் இராமசாமி, முகவை-ஆர். எஸ். பாண்டியன், காஞ்சி-பாபு ஆகியோருடன் அருப்புக்கோட்டை வந்து சேர்ந்தார்கள். அப்போதுதான் பெருமழை பெய்து ஓய்ந்திருந்தது என்றாலும், கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கூடிவிட்டனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தோரையும், அண்ணா அவர்களையும், இதர தோழர்களையும் வரவேற்று தோழர் சிவ. சண்முகசுந்தரம் அவர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு, கூட்டத்திற்குத் தோழர் எம் எஸ். இராமசாமி அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தலைமை ஏற்று, தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் அரசியல் நிலைகளை விளக்கியும், ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் குறித்தும் பேசினார்.

அடுத்து தோழர் சிவ. இளஞ்செழியன் சிறிது நேரம் பேசியதும், தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன், தி மு கழகம் ஒரு விடுதலை இயக்கம் என்பதையும், திராவிடரைப்போல், உலகின் பல பாகங்களிலும் இன்று விடுதலை கோரி கிளர்ந்தெழுந்துள்ள பல நாட்டு மக்களின் இன்னல்கள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

பின்னர் அண்ணா அவர்களுக்கு நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்து, கைத்தறி ஆடை அணிவித்தார்.

வேறு பல மன்றங்கள், சுற்றுவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்கள் சார்பிலும், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர் அண்ணா அவர்கள், பெருத்த கையொலிக்கிடையே எழுந்து, அரியதோர் கருத்துரை நல்கினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி நவிலலுடன், கூட்டம் இனிது முடிவுற்றது.

பின்னர், தோழர் சிவசண்முக சுந்தரம் அவர்கள் இல்லத்தில் உணவு அருந்திவிட்டு, வந்திருந்த கழகத் தோழர்கள் பலருடன் கழக ஆக்க வேலைகள் சம்மந்தமாகச் சிறிதுநேரம் உரையாடினார்கள்.

இதற்கு முன்பாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களின் செயலாளர்களும், மாவட்டச் செயலாளரும் மாவட்ட நிர்வாகிகளும், தனித் தனிப் பிரிவினராக, அண்ணா, மற்றும் முகவை ஆர். எஸ். பாண்டியன், காஞ்சி பாபு, எம். எஸ் இராமசாமி ஆகியோருடனிருந்து புகைப் படங்கள் எடுத்துக் கொண்டனர்.

மாவட்டத்தில் சுற்றுப் பயண ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து, சுற்றுப் பயணம் முழுவதும் உடனிருந்து நிகழ்ச்சிகள் செவ்வனே நடைபெற பெரிதும் உழைத்த மாவட்டச் செயலாளர், மற்றும் தோழர்களுக்கு நன்றி கூறிக் கொண்டு அண்ணா அவர்கள், இதர தோழர்களுடன் மதுரை புறப்பட்டார்கள் (த.-நி.)

'சுதந்திரமே அன்றி அடிமைத்தனமல்ல'

"உலகத்தில் முன்னேற்றமடையாத பிரதேசங்களுடன் நமக்கு இருக்கும் தொடர்பில் நாம் உருவாக்க விரும்புவது சுதந்திரமே அன்றி, அடிமைத்தனமல்ல! விலக்கு வாங்கக்கூடிய எந்த நாடும், என் கருத்தில் வாங்கத் தக்கதல்ல!"

என்று, செனட்டர் மைக் மான்ஸ்ஃபீல்ட் கூறியுள்ளார்.

மது அருந்துவோர் தொகை எவ்வளவு?

கொழும்பு, ஜூன் 22—

இலங்கை மக்கள் எண்ணிக்கையில் 100-க்கு 5 பேர், எந்தவிதத்திலாவது மது அருந்துகின்றனர் எனத் தெரியவருகிறது. ஆண்களில் 100-க்கு 20 பேர் மது அருந்துகின்றனரென்றும், மொத்த மக்கள் எண்ணிக்கையில் 100-க்கு 3 பேர் 'பீர்' குடிக்கின்றனரென்றும் கூறப்படுகிறது.

இலங்கை மக்கள் மது அருந்துவதில் ஆண்டிற்கு ரூ. 850 இலட்சம் செலவிடுவதாகக் கூறப்படுகிறது.

புதிய நாணயங்கள் தயாராகின்றனவாம்!

புதுடில்லி, ஜூன் 21—

தசாம்ச நாணய முறை வரும் 1957 ஏப்ரல் 1-க்தேதி முதல் புழக்கத்திற்கு வரப்போவதை ஒட்டி, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள மத்திய சர்க்கார் நாணயச்சாலைகள், புதிய நாணயத் தயாரிப்பில் ஏற்கனவே ஈடுபட்டுவிட்டனவாம்.

புதிய நாணயமுறை அமுலுக்கு வரும்போது, சர்க்கார் அலுவலகங்களில் செய்யவேண்டிய மாற்றங்கள் குறித்தும், புதிய முறையைப் புகுத்தும்போது ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்கான வழி வகைகளைக் கண்டறியும் பொருட்டும், இந்திய சர்க்கார் மிகு இலவினர் அடிக்கடி கூடிப்பேசி வருவதாக என்றனர் என்ற தெரிய வருகிறது.

ஒருமூனை முதல் மறுகோடி வரை!

நடந்து செல்லக்கூடிய 'காரிடார்' இரயில்கள்

புதுடில்லி, ஜூன் 22—

இரயில் பெட்டியின் ஒரு முனையிலிருந்து மறுகோடியில் உள்ள பெட்டிவரை நடந்து செல்லுவதற்கு வசதியுள்ள மூலம் 'காரிடார்' இரயில்கள், இன்னும் சில வாரங்களுக்குள் டில்லி—சென்னை; பம்பாய்—சென்னை; ஹௌரா—சென்னை இடையே விடப்படுமெனத் தெரிகிறது.

இவை முழுவதும் அப்படியே மூன்றாவது வகுப்புப் பெட்டிகளைக் கொண்ட 'ஜனதா இரயில்'களாக இருக்குமாம்!

திருமணங்கள்

11—6—56ல், பழனி நடராசா நிலையத்தில் நெய்க்காரபட்டி ரேணுகாதேவி உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர் தோழர் வெங்கிடசாமி—ஆசிரியை தோழியர் வெற்றிச்செல்வி நிருத்திய நிருமணம் தோழர் பூ. ரா. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—6—56 காலை 10 மணியளவில், சேலம் மாவட்ட, ஆத்தூர் வட்டம் உலிபுரத்தில் தோழர் குறள்நிதி—தோழியர் பாப்பா சேர் நிருத்தத நிருமணம் தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம் எல் ஏ. தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆனைமுத்து, வி. வெங்கிடாசலம், காந்தி நிருட்டிணசாமி, மு அறிவாயுதம், குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தி. மு. கழகத் தலைவர்களிடமிருந்து வாழ்த்துரைகள் வந்தன. இந் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—6—56ல், திருச்சி அம்மம்பாளையத்தில் தோழர் வெ. முத்துசாமி—தோழியர் தனபாக்கியம் நிருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17—6—56 காலை 7.45 மணியளவில் கோவிலடி இராமசாமி (சோழகர்) குமாரர் தோழர் இரா. சோமசுந்தரம்—சோமாகுடி ஆ. சுப்பையா(நாடார்) குமாரி தோழியர் வேம்பு நிருமணம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். நெடுமாறன், ம. கதிரேசன், டி. கே. சினிவாசன் ஆகியோர் சிறந்த நிருமணவுரைகளும், கலப்புத் நிருமணங்களும் நடைபெறவேண்டிய அவசியங்கள் பற்றியும், ஆரியம் கலந்த பழைய மூடசம்பிரதாயங்களையும், பழக்கவழக்கங்களையும் ஒழிக்க வேண்டிய அவசியங்கள் குறித்தும் விளக்கிப் பேசினர்.

கோவிலடி தி. மு. கழகத்தினரும், திருவள்ளுவர் கழகத்தினரும், ஊராண்மைக் கழகத்தினரும், கன்பர்களும் வாழ்த்துரை வாசித்தளித்தார்கள். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17—6—56 மாலை 12 மணியளவில், தோழர் தா. மு. இராமலிங்கன் தலைமையில், தோழர் இரா. செல்வன்—தோழியர் கோவிந்தம்மாள் நிருமணம் மேலாய்க்குடியில் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் பறம்பை-ராசா, எஸ். முத்து ராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

22—6—56 காலை 8 மணியளவில், பழைய பள்ளாவரம், நிருவேங்கிடமுடையான் தெரு, எண் 1/87 இல்லத்தில், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், தோழர் டி. இராசு—தோழியர் விமலா நிருமணம் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், சி. வி. குடலழகன், தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17—6—56 காலை 9 மணிக்கு, புதுவை அடுத்த பாக்கமுடையான் பேட்டையில், முதாபாத் தோழர் சி. சண்முகம்—தோழியர் அமுதவல்லி என்றழைக்கும் விசாலாட்சி நிருமணம், தோழர் ச. செல்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ, வழக்கறிஞர் சு. பெருமாள், இரா. சாம்பசிவம், செ. கோவிந்தராசன், கோ. பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முதாபாத் தோழர்கள் பலர் மணமக்களுக்கு வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தனர். பலர் வாழ்த்திதழ்களும், பரிசுகளும் வழங்கினர். இந்நிருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

18—6—56 காலை 10 மணியளவில், புதுவை மாவட்டத்தைச் சேர்ந்த சஞ்சீவிராயன்பேட்டையில், தோழர் மு. கோபாலன்—தோழியர் இரா. இராமு நிருமணம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ச. செல்பிரகாசம், வழக்கறிஞர் சு. பெருமாள், ம. கோயில் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு வாழ்த்திதழ்களும், பரிசுகளும் பல தோழர்களால் வழங்கப்பட்டன. இந் நினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்புகள் வரவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்]

பண்டிதரின் ஒற்றுமை உபதேசம்

பம்பாய் கடற்கரையில் ஆழப்புதைக்கப்படுகிறது

மராட்டியர் தொடர்ந்து அறப்போரில் ஈடுபடுவர்

பொறுமை என்பது ஆளும் கட்சியின் ஏகாதிபத்ய முடிவுக்கு அடிபணிவதா?

பம்பாய், ஜூன் 22—

'தேச ஒற்றுமை கருதி ஒப்புக்கொள்ளுங்கள்; என் முடிவை ஏற்றுக்கொள்ளுங்கள்; பொறுமையாயிருங்கள்' என்ற பாரதப் பிரதமர் பண்டித நேருவின் உபதேசத்தை, பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் ஆழமாகக் குழி தோண்டிப் புதைத்துவிட மராட்டியர் முடிவு செய்துள்ளனர்!

'தொடர்ந்து சத்தியாக்கிரகம் நடைபெறும்; நேருவின் உபதேசம் ஏற்கத் தக்கதல்ல,' என்று, சம்யுக்த மராட்டிய சமிதியின் பொதுச்செயலாளர் எஸ் எம். ஜோஷி தெரிவித்திருக்கிறார்.

சத்தியாக்கிரகம் வேண்டாம்' என்று சவ்கார்ராவ் தேவ் கூறியதையும் அவர் கண்டித்திருக்கிறார்.

"பம்பாய், ஐந்து ஆண்டுகளுக்கு டில்லியின் ஆட்சிக்கு உட்பட்டே இருக்கும் என்ற முடிவை, தேச ஒற்றுமை கருதி மராட்டியர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மாகிலப் புது அமைப்பு என்ற சிக்கலான பிரச்சினைக்கு முடிவு காணுவதில் மராட்டியர் பொறுமையும், சகிப்புத் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் காட்ட வேண்டும் என்றும் நேரு உபதேசித்திருக்கிறார்.

"அதே நேரத்தில் பிரதமர் நேரு, மாகிலப் புது அமைப்பு ஒரு தேசிய முகியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதையும் ஒத்துக் கொண்டிருக்கிறார்; இருந்தாலும், அவர் ஒரு தலைப்பட்சமான முடிவுகளை, எதிர்க்கட்சியினரின கருத்துக்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலேயே மேற்கொண்டு விடுகிறார்.

"பொறுமை என்பதும், சகிப்புத்தன்மை என்பதும், 'பம்பாய் மத்திய சர்க்காரின் ஆட்சியிலேயே இருக்கும்' என்ற ஆளும் கட்சியின் முடிவுக்கு, வாய்பொத்தி கைகட்டி சரணடைந்துவிடுவதுதானா?" என்றும், எஸ். எம் ஜோஷி கண்டித்திருக்கிறார்.

புது உருப்பெறும் டில்லியில் சேரிகள் ஒழிப்புக்குத் தீவிரத் திட்டங்கள்

இந்தியாவின் தலைநகரம் அதிவேகத்தில் விரிவடைந்து வருகிறது; எங்கு பார்த்தாலும் புதுப் புதுக் கட்டிடங்களும், நகரங்களும் தோன்றிவருகின்றன. இந்த அபிவிருத்தி வேலையில் பழைமையான சேரிகள்—நகரத்துக்கே அவப் பெயரைத் தருகிற பகுதிகள் ஒழிந்து வருகின்றன.

சேரி ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான 12 திட்டங்களை டில்லி நகர அபிவிருத்தி நிறுவனம் மேற் கொண்டு நடத்தியிருக்கிறது; அந்தத் திட்டங்கள் மூலம் சுமார் 400 ஏகரா நிலம் சீர்படுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 333 இலட்சம் செலவில் 1,720 ஏகரா நிலத்தை அபிவிருத்திசெய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. சேரி ஒழிப்பு மூலம் 1,300 ஏகரா நிலத்தை விருத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ரூ. 460 இலட்சம் செலவாகும.

ரூ. 4,57,80,000 செலவில் 2-வது திட்ட காலத்தில் 14,400 வீடுகளைக் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது வீடுகளுக்கு 24 ரூபாய் வீதம் வாடகை விதித்தால் இலாபகரமாக இருக்கும்; ஆனல், ரூ 12 தான் வசூலிக்கப்படும; மீதி, சர்க்கார் தரும சகாயத் தொகை மூலம் சரிக்கட்டப்படும்.

2,500 ஆண்டுகளுக்கு முந்திய கல்லறை!

கொழும்பு, ஜூன் 21—

2,500 ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படும் கல்லறை ஒன்று காணப்பட்டிருக்கிறதாம்.

இங்கிருந்து 90 மைல் தொலைவில் உள்ள புட்டளம் எனுமிடத்தில் அது தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

மண்பானைகள், சுமார் 3 அடி உயரமுள்ளவை, மனித எலும்புகளோடு தோண்டி எடுக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இந்தியாவிலிருந்து, விஜய என்னும் இளவரசன் இலங்கையில் குடியேறி, கிறிஸ்து பிறப்பதற்கு 543 ஆண்டுகளுக்கு முன்பாகவே சிங்கள நாகரீகத்தை தோற்றுவிக்கும் முன்பு இங்கு குடியேறிய மக்களின் எலும்புக்கூடுகளாக அவை இருக்கலாம் என்று கருதப்படுவதாக இலங்கை புதை பொருள் ஆராய்ச்சி இலாகாத் தலைவர் கூறுகிறார்.

அமெரிக்கா பரீட்சித்த நீர்வளிக் குண்டு

ஜப்பானில் கதிரியக்க மழை மொழிவிக்கிறது

டோக்கியோ ஜூன் 22—

ஜப்பானின் பல பகுதிகளில், ரேடியக் கதிரியக்கம் கலந்த கருமேகம் சூழ்ந்து கொண்டுவந்து தூள மழை பெய்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மே 21-ம் நாளன்று பிக்கினி யில அமெரிக்கா நடத்திய நீர்வளிக் குண்டு பரீட்சையின் விளைவாக இம்மழை பெய்திருக்கலாமென டோக்கியோ வானிலை போசிரியர் தெரிவித்தாராம்.

விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராக எடுபிடிகள்!

மதியழகன் எச்சரிக்கை

'இந்த நாடு எந்தத் திக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது?'

'உலகில் நடைபெறும் விடுதலைக் கிளர்ச்சிகள் நமக்குக் கூறுவதென்ன?'

மாநில மாநாட்டில் விளக்கம்

'விடுதலைக் கிளர்ச்சிகள்' என்ற தலைப்பில், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் திருச்சி மாநில மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் கீழே தரப்படுகிறது.

"திருச்சி நகரில் நடைபெற்ற நமது ஊர்வலத்தைக் கண்டவர்கள் இந்த நாடு எந்தத் திக்கு நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

"இலட்சோப லட்சம் மக்கள் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள். அவர்கள் எல்லாம், 'இந்த நாடு இந்த நாட்டவருக்கு ஆகவேண்டும்,' 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழக்கமிட்டார்கள். இந்த முழக்கம், இந்த நாட்டு மக்களுடைய இலட்சியத்தை உலகுக்கு எடுத்துக்கூறுகிறது. ஆட்சியாளர்கள் உண்மையிலேயே நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ள இந்த ஊர்வலம் பயன்படும் என்று நான் கருதுகிறேன்.

"திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்—என்ற விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நாம், இக்கு, மாநில மாநாடு கூட்டியிருக்கிறோம். அதை ஒட்டி பிரம்மாண்டமானதோர் ஊர்வலம் நடத்தினோம். நம்முடைய இலட்சியத்தை நாம் அமைதியான ஜனநாயக வழிகளில் ஈடேற்றிக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறோம்.

"தென்னாட்டில்—'வடவர் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்; திராவிடம் தனியரசு பெறவேண்டும்' என்ற கிளர்ச்சியில் நாம் ஈடுபட்டிருக்கும் இதே நேரத்தில், உலகெங்கும், நம்மைப் போன்றே விடுதலை கோரி போராட்டங்களில் எண்ணற்ற நாட்டுமக்கள் ஈடுபட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

"நாம் யாரை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோமோ, அதே டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்தே அசாம் காடுகளில் வாழும் நாகர்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"அசாம் காடுகளில், வாழுகின்ற 2 இலட்சம் நாகர்கள், தங்களுக்கென ஓர் தாயகம்—தனி யரசு வேண்டுமெனக்கோரிப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நம்மைப்போல பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்துவது, மாநாடு கூட்டுவது, அமைதியான அறப்போரில் ஈடுபடுவது என்று வைத்துக் கொண்டிருக்கவில்லை; மாறாக, காடுகளில்—மலைக் குகைக்களில் வாழும் அந்த நாகர்கள், டில்லி அனுப்பிவைத்துள்ள இராணுவத்தை எதிர்த்து, நேரடியாகவே போரட்டத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் தங்கள் கைகளில் சிக்கிவிட்டிருக்கிற ஆயுதங்களைக்கொண்டு, டில்லியை எதிர்க்க முனைந்திருக்கிறார்கள். டில்லி சர்க்கார், நாகர்களின் சுதந்திரக்கோரிக்கையை ஏற்க மறுத்து, அவர்கள்மீது இராணுவத்தை ஏவி, கொடூரமான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, அவர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடலாம் என்று கருதுகின்றனர். வலிமை மிகுந்த டில்லியின் இராணுவத்திற்கு எதிராக விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாகர்களின் விடுதலை ஆர்வத்தை என்னென்பது?

"இன்று, இந்த இந்தியத் துணைக்கண்டத்திலே மட்டுமல்ல, விடுதலைக் கிளர்ச்சிகள் நடைபெறுவது; வட ஆப்பிரிக்காவில், அல்ஜீரியாவில் கிளர்ச்சி நடைபெறுகிறது, விடுதலை கோரி! மொராக்கோவிலும், டுனிஷியாவிலும் போராட்டங்கள் முடிவுற்று வெற்றியும் கிட்டியிருக்கிறது, அந்த நாட்டு மக்களுக்கு!

"சைப்ரஸ் என்று ஒரு நாடு; மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருப்பது; அங்கே, பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்றனர், மக்கள்! மகாரியஸ் என்ற ஒரு பாதிரியார்—அந்த நாட்டு விடுதலைக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்திவருகிறார்; அவரைச் சின்னஞ்சிறு நாட்டுக்கு முன் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் நாடு கடத்திவிட்டதின் எதிரொலியாக சைப்ரஸ் மக்கள் கொதித்தெழுந்திருக்கிறார்கள்; மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்; அந்த ஆர்ப்பாட்டங்களில் எண்ணற்ற இளைஞர்கள், மாணவர்கள் எல்லாம் பெரும் பங்கு கொண்டு விடுதலை முழக்கமிட்ட வண்ணமுள்ளனர். அவர்களிலே இருவரை வெள்ளை ஏகாதிபத்தியம் தூக்குக் கயிற்றில் தொங்கவிட்டிருக்கிறது! எண்ணற்றோரைச் சிறைச்சாலையில் தள்ளிவைத்திருக்கிறது! பலரைக் கொடுமை பலவற்றிற்கு ஆளாக்கியிருக்கிறது! இந்த அடக்குமுறைக் கொடுமைகளை எல்லாம் தாங்கிக் கொண்டுதான், சைப்ரஸ் மக்கள் விடுதலை கோரி நிற்கிறார்கள்! இந்த அடக்குமுறைகளுக்குப் பின்னும் அவர்கள் தளர்ந்து போய்விடவில்லை; சோர்ந்துபோய்விடவில்லை!

"இப்படி உலகில் இன்று, எங்கெல்லாமோ விடுதலைக்காக—சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சிகள் நடைபெறுவதை நாம் காண்கிறோம்.

"இங்கு நாம் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம். நம்முடைய விடுதலைக் கோரிக்கையின் நியாயம் நாளுக்கு நான் வலுத்து வருவதையும், மக்கள், தங்கள் விமோசனத்திற்கு திராவிட நாடு பெற்றாக வேண்டும் என்பதை வேகமாக உணர்ந்துவருவதையும் நாம் காண்கிறோம்.

"இந்த நாட்டில் இன்று நம் மக்களின் நலன்களுக்கு எவர் விரோதிகளோ, எவர் இந்த நாட்டு மக்களை வடநாட்டவருக்குக் காட்டிக் கொடுக்கிற கங்காணிகளோ, அவர்கள் எல்லாம் இந்த நாட்டு மக்களின் தலைவர்கள் என்று கூறித்திரிகின்றனர்.

"வடநாடு, தென்னாட்டு மக்களை—திராவிடர்களை அடிமை கொண்டு ஆதிக்கம் செலுத்தும் நிலைகளை நாம் எவ்வெவ்வகைகளால் எல்லாமோ எடுத்துக்காட்டியாகிவிட்டது. கடந்த எட்டாண்டுகளில் டில்லி ஏகாதிபத்தியம், திராவிட மக்களை எந்தெந்தத் துறைகளில் எல்லாமோ பிணைத்து வைத்து, அடக்கி ஆண்டுவருகிறது என்பதையும் விளக்கிக் கூறியிருக்கிறோம்! திராவிடரின் அடிமைத்தளையறுக்க விடுதலைப் படையும் திரட்டிவிட்டோம்! உலகில் அடிமை விலக்கொடித்த நாடுகளைக் காண்கிறோம்! விடுதலைக்காகப் போராடும் மக்களையும் பார்க்கிறோம்! அந்த நேரத்தில் நம் விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராக இந்த நாட்டுக் காங்காணிகள் பேசிவருவதையும் கேட்கிறோம்! அவர்களுக்கெல்லாம் நாம் கூற விரும்புவது—'திராவிடரின் விடுதலைக் கோரிக்கை வெகு நியாயமானது; அந்த நியாயத்தை எத்தனை கொடிய அடக்குமுறைகளாலும் அழித்துவிட முடியாது; இந்த நாட்டவர் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கவில்லை; விழிப்புப் பெற்றுவிட்டனர்! வீறிட்டு எழுந்துவிட்டனர்! போராடப் புறப்பட்டுவிட்டனர்! இந்தப் போராட்டம் வெல்வது உறுதி, உறுதி'—என்பதைத்தான்!

"அமெரிக்காவின் விடுதலை விரும்பியான ஜார்ஜ் வாஷிங்டனுக்கு எதிராக அர்னால்டு என்று ஒரு கங்காணி இருந்தான்; வாஷிங்டன் நடத்திய விடுதலைப் போரை அவன் எதிர்த்து நின்றான்; ஆனால் வீணாவது, துரோகி அர்னால்டு தோல்வியைத்தான் அணைத்துக் கொண்டான்! வெற்றி வாஷிங்டனுக்குத்தான் சேர்ந்தது! இந்த நாட்டுக் கங்காணிகள்—வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் நடத்தும் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக நிற்கும் 'எடுபிடி'கள், தோல்வியைத்தான் சந்திப்பர் என்பதையும் நாம் கூற விரும்புகிறோம்."

ம. பொ. சிவஞானம் ஐம்பதாம் ஆண்டு நிறைவு பொன் விழா

26—6—56 மாலை 5 மணிக்கு, சென்னை — எஸ்பிளனேட், இராசா அண்ணாமலை மன்றத்தில், திரு. ம. பொ. சிவஞானம் அவர்களின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு பொன் விழா, பேராசிரியர் இளவழகனார் தலைமையில் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு இசை விருந்து; 5-30 மணிக்கு விழாத் துவக்கம்—வரவேற்புரை: டி. கே. சண்முகம்; தலைமையுரை: பேராசிரியர் இளவழகனார்; பட்டயம் வழங்குதல்: வித்வான் கி.வா. ஜெகன்னாதன்; கார் வழங்குதல்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்; நிதி வழங்குதல்: எம். ஏ. வேணு; வாழ்த்து மடல்கள்; பரிசுகள் கொடுத்தல்; பேரறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள்; அரசியல் மேதைகள் வாழ்த்துரைகள்; நன்றியுரை—ம. பொ. சிவஞானம்.

ஈ. வெ. கி. சம்பத் காஞ்சீபுரம் வருகை

8—7—56-ல், காஞ்சீபுரத்தில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அண்ணா உவமை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படைக்கப்பட்டிருப்பது என்ன நியாயம்?

"இலங்கையிலிருந்து தரத்தப்பட்டு, தமிழகம்வந்து, அனைதைகளாக, அழுத கண்ணீரோடு உலவுகிற மக்களுக்கு வாழ்வு அளிக்க, டில்லி சர்க்காரோ, இங்குள்ள காமராசர் சர்க்காரோ என்ன செய்தார்கள்?

காமராசரைக் கேட்டால், 'வந்தவர்கள், தாங்களே வாழ வகை தேடிக்கொள்வார்கள்' என்று கூறுகிறார்! எப்படித் தேடிக்கொள்ள முடியும்?

"இலங்கையிலிருந்து தரத்தப்பட்டு தாயகம் திரும்புவோருக்கு இங்கு என்ன, சொத்து குவிந்தா கிடக்கிறது? உறவினர்கள் என்ன, உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களா? இல்லையே! இந்த நாட்டில், ஒரு வகனம் சோற்றுக்கு வழி இல்லாத நிலைதானே, இங்கு தன் குடும்பத்தை—தாய் தந்தையரை—மனைவி மக்களைக் காப்பாற்ற வழி இல்லாததானே, ஓடுகிறார்கள் இலங்கைக்கு! அப்படி ஓடியவர்கள் இங்கே திரும்பும்போது, அவர்களாகவே வாழவழி செய்துகொள்வர் என்றால், அது எப்படி முடியும்?

"வடநாட்டவர், பாகிஸ்தானிலிருந்து அகதிகளாக ஓடிவந்தனர். அப்போது டில்லி சர்க்கார், அவர்களை வாழ்விப்பதற்காக இதுவரை சுமார் ரூ 200 கோடிக்கும் அதிகமாகச் செலவிட்டிருக்கிறார்கள்.

"இந்தத் தமிழ் நாட்டிலேகூட, பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு, சர்க்கார், தங்கள் சொந்தச் செலவில் பெட்டிக்கடை வைத்துத் தந்தனர்; இலவசமான வசதிகள் பல செய்து தந்தனர். வடநாட்டு அகதிகளுக்கு இப்படிக் கோடிக் கணக்கில் பணம் செலவிட்ட சர்க்கார், தமிழர்களுக்கு—இலங்கையிலிருந்து ஓடிவந்தவர்களுக்கு ஏதும் செய்ய மறுக்கிறது என்றால், என்ன பொருள்? அதற்கு 'வடவர், தங்கள் மக்களை மட்டுமே கவனிக்கக்கூடியவர்கள்—தங்கள் நாட்டு நலனில் மட்டுமே அக்கறை கொண்டவர்கள்' என்பதுதானே, அதற்குப் பொருள்?

"காமராசர் சர்க்கார், வடநாட்டு சர்க்காரை எஜமானர்களாக ஏற்றுக்கொண்டிருப்பதினால்தானே—இந்த நாட்டு அரசியல் 'சூத்திரக் கயிறு' வடவரிடம் இருப்பதினால்தானே, தமிழர்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது?

"வடநாட்டவரைத் தட்டிக் கேட்கிற உள்ளத்துணிவு, காமராசர் சர்க்காருக்கு இருக்கிறதா என்றால், இல்லையே! வடவர், தென்னாட்டவரை—அவர்கள் எவ்வளவு பெரிய 'மேதை'களாயிருந்தாலும் எங்கே மதிக்கிறார்கள்?"

பல்லாவரம் தி. மு. க. பொதுக்கூட்டம்

14—7—56-ல், பல்லாவரம் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் பேசுவார்.

சட்டப் பரீட்சையில் வெற்றி

தி. மு. கழக மாணவர் கிளையின் முக்கிய உறுப்பினர் தோழர் வி. சிவப்பிரகாசம் அவர்கள் பி.எல். பரீட்சையிலும், சட்டசபை உறுப்பினரும், தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினருமான தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் எப். எல். பரீட்சையிலும் தேர்வு பெற்றுள்ளனர் என்ற செய்தி, மகிழ்ச்சியுடன் அறிவிக்கப்படுகிறது.

கிராமப் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்

போட்டியின்றி தி. மு. கழகத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட்டார்

அரசிராமணி கிராமப் பஞ்சாயத்து, 22—6—56-ல், புதிதாக அமைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது.

பஞ்சாயத்து போர்டு தலைவராக சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அவர்கள் போட்டியின்றி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கழகத் தோழர்களுக்கு:

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்குக் கடிதம் எழுத விரும்புவோர், கீழ்க்கண்ட எதாவது ஒரு முகவரிக்கு எழுத வேண்டப்படுகிறார்கள்:—

'தனி அரசு',
131, பிராட்வே, சென்னை-1

அல்லது

'சம்பத் நிலையம்',
4, பி. பி. ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.

அகமதாபாத் ஆலைகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூ. 200 இலட்சம் வரை 'சமிஷ்டி'க தரப்பட்டிருப்பதாயும், தேய்மானச் சேமிப்பாக ரூ. 224 இலட்சமும் ஒதுக்கப்பட்டது என்றும், ரூ. 472 இலட்சம் நிகர இலாபமாக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்களே—உங்கள் ஊரிலுள்ள கழகத் தோழர்கள், தங்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து கொண்டார்களா — இல்லையெனில், அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

—தலைமைக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு,